# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 8/2014** **நாள் : 20/03/2014**

**பெறுநர்**
மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்

அன்பார்ந்த தோழரே,

வணக்கம்,

2014 மார்ச் 15, 16 தேதிகளில் நடைபெற்ற பொதுக்குழுவின் நடவடிக்கைகள் முடிவுகள் சம்மந்தமாக தனியாக கோட்ட செயலாளர்கள் வரை சுற்றறிக்கை அனுப்பபட உள்ளது.

இதற்கிடையில் மின் வாரியத்தில் காலியாக உள்ள களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாகவும், காலி பணி இடங்களை நிரப்புவது சம்மந்தமாகவும் நடவடிக்கை எடுத்தோம். அதன் அடிப்படையில் 4660 மஸ்தூர்களை கள உதவியாளர்களாக பதவி உயர்வு அளிக்கின்ற உத்தரவும் 4000 தொழில்நுட்பம் பயின்றவர்கள் களஉதவியாளர், பயிற்சியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

4660 மஸ்தூர்களை கள உதவியாளர்களாக நியமிப்பது சம்மந்தமாக வாரிய உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதிலும் ஒரு சில வட்டங்களில் மட்டுமே வாரிய உத்தரவினை பயன்படுத்தி மஸ்தூர்களை கள உதவியாளர்களாக பதவி உயர்வு அளிக்கும் உத்தரவு அளிக்கப்பட்டது. இதற்கிடையில் தேர்தல் அறிவிப்பும், அதனையொட்டிய விதிமுறைகளும் அமலுக்கு வந்த காரணத்தினால் பல வட்டங்களில் மஸ்தூரில் இருந்து கள உதவியாளராக பதவி உயர்வு அளிக்கும் உத்தரவு அளிக்கப்படவில்லை. இது சம்மந்தமாக வாரிய தலைமையிடம் பேசியுள்ளோம். வாரிய தலைமையும் தேர்தல் ஆணையத்தை அணுகி சிறப்பு அனுமதி பெறுவதற்குண்டான நடவடிக்கையை எடுக்க இருப்பதாக தெரியவருகிறது.

கள உதவியாளரில் இருந்து கம்பியாளர், வணிக உதவியாளர் பதவி உயர்வை உடனடியாக வழங்க வாரியம் உத்தரவு பிறப்பித்ததும் அந்த உத்தரவினையொட்டியே பாரதீய

மஸ்தூர் சங்கம் (BMS) களப்பிரிவு ஊழியர்களின் ஒட்டு மொத்தமான பதவி உயர்வுக்கு தடையைபெற்ற காரணத்தினால் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு பதவி உயர்வு தடைபடும் நிலை ஏற்பட்டது. இத்தடையை நீக்கி பதவி உயர்வு கிடைக்க மின் ஊழியர் மத்திய அமைப்பு முயற்சி எடுத்தது. மின் ஊழியர் மத்திய அமைப்பின் தொடர்ச்சியான முயற்சியின் விளைவாக களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வுக்கு உயர்நீதிமன்றம் வழங்கிய தடை நீக்கப்பட்டதோடு பாரதீய மஸ்தூர் சங்கம் தொடுத்த வழக்கையும் நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தது.

களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வுக்கான தடை நீக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு வழங்க தேர்தல் ஆணையத்தை அணுகி சிறப்பு அனுமதி பெறவேண்டும் என வாரியத்திடம் முறையிட்டுள்ளோம். வாரியமும் நமது முறையீட்டை ஏற்றுக் கொண்டுள்ளது. தேர்தல் ஆணையத்தின் சிறப்பு அனுமதியை பெற்று பதவி உயர்வு வழங்க வகை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2005, 2007 ஆம் ஆண்டுகளில் மஸ்தூர் ஆக பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் அடுத்த பதவி உயர்வுக்கான இரண்டு ஆண்டுகால பணிக்காலத்தை 2007 ஆம் ஆண்டிலும், 2009 ஆம் ஆண்டிலும் முடித்துள்ள நிலையில் அவர்களை 2007, 2009 ஆம் ஆண்டிலேயே களஉதவியாளர்களாக நியமிக்காமல் 2012-ம் ஆண்டில் கள உதவியாளர்களாக நியமித்துள்ளதால் அவர்களுக்கு இளையவர்கள் முன்னுரிமை பெற்று பதவி உயர்வு பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. அதை மாற்றி அமைக்கும் விதமாக 2007, 2009 இல் கள உதவியாளர்களாக பதவி உயர்வு கொடுத்ததாக கணக்கில் கொண்டு முதன்மைபட்டியலில் சீனியர்களாக வைத்து பதவி உயர்வு வழங்க மத்திய அமைப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்